Volume 2 Issue 2 February 2021 E-ISSN: 2582-2063

# தமிழ் மண்ணைக் காத்த மருது பாண்டியர்கள்

**முனைவர் வீ. ரோஜா**
*உதவி பேராசிரியர் மற்றும் வரலாற்றுத்துறை தலைவர்*
*சீதாலெட்சுமி ஆச்சி மகளீர் கல்லூரி, பள்ளத்தூர், சிவகங்கை மாவட்டம்*

**முன்னுரை**

தழிழ்நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிராக விடுதலை போராட்ட முன்னோடிகளாக திகழ்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்தவர்கள் தென்னகத்தின் சிங்கங்கள், மருது பாண்டியர்கள் என்றழைக்கப்பட்ட மருது சகோதரர்கள். இவர்கள் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள நரிக்குடிக்கு அருகில் முக்குளம் என்ற கிராமத்தில் உடையார் சேர்வை என்ற மொக்க பழனியப்பன் சேர்வைக்கும், ஆனந்தாயி என்ற பொன்னத்தாள் என்பவருக்கும் புதல்வர்களாக தோன்றியவர்களே பெரியமருதும், சின்னமருதுமாவர். முன்னர் முத்து விஜய இரகுநாதரின் ஆட்சிக் காலத்தில் உடையார் சேர்வையும், பொன்னத்தாளும் இராமநாதபுரத்தில் உள்ள கொன்காரு (Kongaru) தெருவில் வசித்தனர். இவர்களுக்கு 1748 ஆம் ஆண்டு டிசம்பர் 15 இல் வெள்ளை மருது பாண்டியர் என்றழைக்கப்பட்ட பெரிய மருதுவும், 1753ல் இளைய மருது பாண்டியர் என்றழைக்கப்பட்ட சின்ன மருதுவும் புதல்வர்களாகப் பிறந்தனர். இவர்களின் குல தெய்வமான மருதப்ப சுவாமியின் நினைவாக மருது என்ற பெயர் வழங்கிற்று.

**மானம் காத்த மருது பாண்டியர்கள்**

ஆங்கிலேயர்களுக்கு எதிராக முதலில் வீரமுழக்கத்தை உரைத்தவர் புலித்தேவர் ஆவார். அவரைத் தொடர்ந்து திப்பு சுல்தான் மற்றும் மருது சகோதரர்கள். இதில் குறிப்பிட்டுக் கூறப்பட்டவர்கள் மருது பாண்டியர்கள். ஏனென்றால் பிரிட்டி'காரன் துப்பாக்கியை தூக்கி வேட்டையாட காட்டிற்குச் சென்ற சமயம், தன் கையில் எதுவும் எடுத்துச் செல்லாமல் வெறும் கைகளால் புலியை நேருக்கு நேர் நின்று கொல்லும் திறன் படைத்தவர் பெரிய மருது. இவர் ஒரு நாணயத்தையே சாதரணமாக கை விரல்களால் வளைக்கும் திறன் கொண்ட மாவீரர். இவர்கள் ஆங்கிலேயர்கள் கட்டச்சொன்ன வரியை கட்ட மறுத்ததோடு, ஒரு அங்குலம் இடத்தைக்கூட உங்களுக்கு விட்டுத்தர மாட்டோம் என்று கூறியதோடு மட்டுமல்லாமல் வேண்டுமென்றால் நேருக்கு நேர் மோதிப்பார்த்து விடலாம் என்று எழுத்து மூலமாக ஆங்கிலேயரை போருக்கு அழைத்தவர்கள் இந்த மாவீரர் மருது சகோதரர்கள்.

**மருதுபாண்டியர்களின் அரசியல் பயணங்கள்**

சிவகங்கைச் சீமையின் தன்னாட்சித் தன்மையும், செம்மையும் பெரிதும் பாராட்டப் பெற்று மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்த 1767ல் பேரமைச்சர் தாண்டவராயன் பிள்ளை அவர்கள் பரிந்துரையின் பேரில் முக்குளம் மொக்கப் பழனியப்பன் சேர்வை மகன் வெள்ளை மருது வேட்டைப் படைத்தலைவனாக நியமிக்கப்பட்டார். வெள்ளை மருதுவின் வீரதீரச் செயல்கள் மன்னர் முத்துவடுகநாதரின் சிந்தையை கவர்ந்தது. அதன் பயனாக வெள்ளை மருது மன்னரின் மெய்க்காவலராக பதவி உயர்வு பெற்றார். பெரிய மருதும், சின்ன மருதும் சிவகங்கை சீமையின் அரசர் முத்துவடுகநாதரின் போர்படையில் வீரர்களாக சேர்ந்து வீரத்துடன் செயலாற்றினார்கள்.

மருது சகோதரர்களை தாண்டவராயன் பிள்ளையின் மக்கள் என்று சிவகங்கை சரித்திரக்கும்மி கூறுகிறது. வளர்ப்பு பிள்ளைகள் என்பது உண்மையாகும். அமைச்சரின் ஆலோசனையின்படி மெய்க்காவலராக இருந்த வெள்ளை மருதுவுக்கு சிவகங்கைச் சீமையின் தளவாயாகப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. சிறு வயலில் மாட மாளிகைகளையும் கட்டிக் கொடுத்தார். வெள்ளை மருதுவின் தம்பி சின்ன மருதுவுக்கு காளையார் கோயில் கோட்டைத் தலைவன் பதவியும் வழங்கினார்.

கி.பி.1772ம் ஆண்டில் சிவகங்கைச் சீமையை ஆங்கிலப் படைகள் கர்னல் ஸ்மித், காப்டன் பிட்மன் இவர்களின் தலைமையில் வெறியோடு தாக்கின. இப்போரில் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாத உடையத் தேவரும், அவரது வீர மனைவி வேலு நாச்சியாரும், பெரிய மருதுவும், சின்ன மருதுவும் ஆங்கிலப் படைகளை எதிர்த்துத் தீரமுடன் போராடினார்கள். இப்போரில் முத்துவடுகநாத உடையத் தேவர் கொல்லப்பட வேலு நாச்சியாரும் மருது பாண்டியர்களும் நாட்டை இழந்து திண்டுக்கல்லிருந்த ஹைதர் அலியிடம் தஞ்சம் புகுந்தார்கள். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட சமாதான உடன்பாட்டிற்குப் பிறகு சிவகங்கைச் சீமை வேலு நாச்சியாருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. வேலு நாச்சியார், பெரிய மருதுவை திருமணம் செய்து கொண்டார்.

1780-1801 ஆண்டு வரை சிவகங்கைச் சீமை, மருது பாண்டியரின் நல்லாட்சியில் நலம் பல பெற்றது. மருது பாண்டியரின் நல்லாட்சியில் சிவகங்கை வலிமை பெறுவதைச் சிதைக்க ஆற்காட்டு நவாப் திட்டம் தீட்டி, அதுபற்றி ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கடிதங்களை எழுதி அணி திரட்டினார்.

சிவகங்கை இராமநாதபுரம் பகுதிகளைக் கொண்ட பரந்த மறவர் சீமையின் புறக்காவல் நிலையமாக பாஞ்சாலங் குறிச்சியும், தலைவாயில் போன்று கமுதிக் கோட்டையும், தலைமை இடமாகக் காளையார் கோயில் கோட்டையும் அப்பொழுது திகழ்ந்து வந்தன.

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் கட்டபொம்மு நாயக்கரை இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் கலெக்டர் ஜாக்சன் அவமானப்படுத்தி அவரையும், அவரது குழுவினரையும் கைது செய்ய முயற்சித்த போது, வீரன் வெள்ளையத் தேவன் அவர்களை தப்புவித்தான். 1799 அக்டோபர் திங்கள் 17ம் நாள் பாஞ்சாலக்குறிச்சிப் பாளையத் தலைவன் கட்டபொம்மு நாயக்கர் பல பாளையக்காரர்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டார். ஊமைத்துரை என்ற குமாரசாமி நாயக்கர் சிவகங்கைச் சீமைக்கு அடைக்கலம் வேண்டிச் சென்றார். ஊமைத்துரை என்ற குமாரசாமி நாயக்கர் சிவகங்கைச் சீமையின் அமைச்சர் சின்னமருதுவின் ஆதரவில் சிறுவயலில் தங்கியுள்ள செய்தி கம்பெனியாருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆங்கிலேயரின் ஆத்திரமானது அளவை மீறின. ‘‘உடனே ஊமைத் துரையை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். தவறினால், சிவகங்கைச் சீமை எனும் சின்ன முயல் செங்குறுதி சிந்திச் சாகும்’’ என ஒலையனுப்பினர் கம்பெனியார்.

கர்னல் அக்னியூவின் தலைமையிலான கம்பெனிப் படைகள் சிவகங்கை நோக்கிப் புறப்பட்டன. வழியில் அவர்களைத் தாக்கிய கிளர்ச்சிக்காரர்கள் அணியை புறமுதுகிடச் செய்துவிட்டு சிவகங்கைக்கு ஏழுகல் தொலைவில் உள்ள ஒக்கூரைப் பிடித்தனர். பரந்தவெளியில் பாசறையை அமைத்தான். அரண்மனை சிறுவயலையும், காளையார் கோவில் கோட்டையையும் தாக்குவதற்குரிய திட்டத்தை வரைவதில் அங்கு ஈடுபட்டான்.

1801ம் வருடம் ஜூலை மாதம் 6ம் தேதி கம்பெனி கவர்னர் ராபர்ட் கிளைவ் சிவகங்கைச் சீமையில் உண்மையான வாரிசு கௌரி வல்லப உடையத்தேவர் அவர்களுக்கு ஜமீன்தார் பட்டம் சூட்டுக என்று உத்தரவளித்தார். கிழக்கிந்திய வாணிபக் கழகத்தின் கவர்னர் லார்டு ராபர்ட் கிளைவ் உத்தரவு கிடைத்ததும், கர்னல் அக்கினியூ ஓர் அறிக்கையை வெளியிட்டார். சிவகங்கைச் சீமையின் பெருமக்களே! உங்கள் உண்மையான மன்னர் முத்துவடுகநாதத் தேவர் வழித் தோன்றலும், வீரமங்கை வேலுநச்சியாரின் சுவீகார புத்திரனுமான கௌரிவல்லப உடையத் தேவரை அமர்த்த உத்திரவாகிவிட்டது. எனவே, நாலு கோட்டை அரச வம்சாவழியைச் சேராத மருது சகோதரர்களை ஆதரிக்காதீர்கள் என்று ஒரு கட்டளை தெரிவித்தார்.

புதிய படைவீரர்களுக்கு பிரான் மலையிலும், காளையார் கோயிலிலும், உறுதிக்கோட்டையிலும், சங்கரபதிக் கோட்டையிலும் பயிற்சியளிக்கப்பட்டது. தலைநகர் சிவகங்கையும், மைய நகரமான காளையார் கோயிலையும், உறைவிடமான சிறுவயலையும் காப்பாற்றிக் கொண்டால் போதுமென்ற முடிவுக்கு மருது சகோதரர்கள் வந்திருந்தனர். அதற்கான அலுவல்களை அவசரமாக நிறைவேற்றிக் கொண்டிருந்தனர்.

1801 ஜுன் 7ம் நாள் அக்னியூ, படை நடத்தி வந்து திருப்பாச்சேத்தியில் முகாமிட்டான். இதற்கு கிளர்ச்சியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆங்கிலேயருக்கு உதவியாக திருச்சி, புதுக்கோட்டை, திருவிதாங்கூர், இலங்கையிலிருந்து படைகள் வரைவழைக்கப்பட்டன்.

ஜுலை மாதம் 30, 1801ம் ஆண்டு காளையார் கோயிலை அடுத்து இருந்த அரண்மனை சிறுவயல் கிராமம், ஆங்கிலேயக் கம்பெனியார் கைவசமாகியது. மருது சேர்வைக்காரர்களது மாளிகைகள் அமைந்த அழகிய ஊரான இந்த ஊரில் வீதிகள் விசாலமாகவும், அழகாகவும் அமைக்கப்பட்டு இருந்ததாகவும், இன்னும் அழகை விட தூய்மை மிகுந்த இத்தகைய ஊரை இந்தியாவில் வேறு எங்குமே பார்க்கவில்லை என கர்னல் வெல்ஸ் தமது குறிப்புகளில் வரைந்துள்ளார்.

**காளையார் கோயில் போர் - 1801**

காளையார் கோயில் கோட்டையைக் கைப்பற்ற கர்னல் அக்கினியூ அரிய பல திட்டங்களைத் தீட்டினான். சிவகங்கையை விட காளையார் கோவிலைத்தான் தலையாய ஊராக போராளிகள் கருதினர்.

வரலாற்றுப் பின்னணியுடன் விளங்கிய இந்த ஊருக்கு இயற்கையான காடு அரணாக பல நூற்றாண்டு காலமாக இருந்து வந்தது. ஆதலால் இந்த ஊரை சிவகங்கைச் சீமையின் உயிர்நிலை என்று சொல்லுதல் பொருத்தமானது. ஆதலால் இந்த ஊரின் கோட்டையைப் பரங்கியரது ஆக்கிரமிப்பில் இருந்து காத்து நிற்பதைப் போராளிகள் தங்களது தலையாய கடமை என்றும் அதனைக் கைப்பற்றி சிவகங்கைச் சேர்வைக்காரர்களது செல்வாக்கையும் மூலபலத்தையும் அழிப்பதை அவர்களது இலட்சியமாக பரங்கியர்கள் கருதினர். இந்தச் சூழ்நிலையில் மிகப் பெரிய போருக்கு காளையார் கோயில் கோட்டையின் களம் தயாராகிவிட்டது.

இந்தப் போரின் முதல் தாக்குதல் காளையார் கோயில் கோட்டையின் மேற்குத் திக்கில் இருந்து துவக்கப்படலாம் என மருது சேர்வைக்காரர்கள் நம்பி அதற்குரிய ஆயுதங்களை, வெடி மருந்துப் பொதிகள், தானியங்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் ஆகியவைகளை காளையார் கோயிலுக்குக் கிழக்கிலும், வடகிழக்கிலும் கொண்டு போய் பத்திரப்படுத்தி வைத்தனர். அரண்மனைச் சிறுவயலில் பிடிபட்ட போராளி ஒருவன் காளையார் கோயில் கோட்டைக்குச் செல்லும் வழியையும், கோட்டைப் பாதுகாப்பு விபரங்கள் பற்றிய செய்தியையும் கூறிவிட்டான்.

ஆனால் அக்கினியூ, கௌரிதுரை, தொண்டைமான் ஆகியவர்களின் போர்த் திட்டம் வேறுவிதமாக அமைந்திருந்தது. கர்னல் அக்கினியூ தலைமையில் ஒக்கூரிலிருந்து ஒரு படைப் பிரிவு காளையார் மங்கலம், போராளிகளின் தடைகளைத் தவிடு பொடியாக்கிக் கொண்டு, கௌரிப் பட்டியில் ஏற்பட்ட எதிர்ப்பை முறியடித்து, வானியங்குடி வழியாக முத்தூரை முற்றுகையிட்டது. வெள்ளை மருதுவின் 2வது மனைவி கருப்பாயி ஆத்தாள் அரண்மனை அழிக்கப்பட்டது. சோழபுரத்திலிருந்து இன்னிங்ஸ் தலைமையில் ஒரு படைப்பிரிவு பல்வேறு தடைகளைத் தாண்டி கொல்லங்குடியை சுற்றி வளைத்து தாக்குதல் புரிந்தனர். சின்ன மருதுவும், அவரது படையினரும் முத்தூரிலும், கொல்லங்குடியிலும் எதிர்த் தாக்குதல் நடத்தினார்.

1801 அக்டோபர் முதல் நாள், காளையார் கோயில் கடுமையான போருக்குப் பிறகு ஆங்கிலேயர் கைப்பற்றினர். மானத்தின் பேராக, வீரத்தின் பேராக விளங்கிய கானப்பேர் தாழ்ந்தது. நீல நிலப்பின்னணியில் குறுக்கும் நெடுக்குமாக சிவப்பு வெள்ளைக் கோடுகளைக் கொண்ட வெள்ளையரது வெற்றிக் கொடி, அந்தக் கோட்டை வாசலில் முகப்பில் தொங்கவிடப்பட்டது. மற்றுமொரு கொடி மருது சேர்வைக்காரர்கள் மிகுந்த பக்திப் பெருக்குடன் திகழ்ந்த காளைநாதர் கோயிலின் உயர்ந்த கோபுர மாடத்தில் இருந்து பறக்கவிடப்பட்டது. காளையார் கோயிலிலிருந்து சிங்கம்புனரி காடுகளுக்கு ஓடிய

மருதுபாண்டியன் அக்டோபர் 19ம் நாள் சோழபுரத்தில் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார்.

மருதுபாண்டியர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு 1801ல் காளையார் கோயில் ஆங்கிலேயர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. ஊர் முற்றிலும் நாசமாக்கப்பட்டது. பழைய ஊர் நத்தத்தின் சிதைந்த பகுதிகளை நாம் இன்றும் சில இடங்களில் காணலாம். நாட்டுக்கோட்டை செட்டியார்கள் முயற்சியால் ஊர் மீண்டும் சீரமைக்கப்பட்டது.

**மருது சகோதரர்களின் ஒற்றுமை**

மருது சகோதரர்கள் என்றழைக்கப்பட்ட மருது பாண்டியர்களின் ஆட்சி, மத ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவை குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. இவர்கள் கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் வழிபாட்டு இடங்களை அமைத்துக் கொடுத்தார்கள். மேலும் இவர்கள் காளையார் கோவில் கோபுரத்தைக் கட்டியதோடு மட்டுமல்லாமல் குன்றக்குடி, திருமோகூர் கோவில்களுக்கும் திருப்பணிகளை செய்தனர்.

இளைய மருது பாண்டியர் என்றழைக்கப்பட்ட சின்ன மருது அரசியல் தந்திரம் மிக்கவர். இவர்கள் தஞ்சாவூர் முதல் திருநெல்வேலி வரை மாபெரும் அரசியல் கூட்டணி ஒன்றைத் தொடங்கி ஆங்கிலேயருக்கு எதிரானப் போராட்டத்திற்கு வழிவகுத்தனர்.

**சின்ன மருதுவும் திருச்சி பிரகடனமும்**

சின்ன மருது 1801 ஜுன் 12 ம் தேதி திருச்சி திருவரங்கம் ஆகிய இடங்களில் வெளியிட்ட அறிக்கை ஜம்புத் தீவு பிரகடனம் என்று அழைக்கப்பட்டது. இவ்வறிக்கையின் மூலம் எல்லா இனங்களையும் சேர்ந்த மக்கள் நாட்டுப் பற்று மிக்க பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், ஆங்கிலேயருக்கு எதிராக போர் தொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. சின்ன மருதைப் பற்றி டாக்டர் இராஜையன் கூறும்போது **“தெளிவான அரசியல் பார்வையும் இயக்கத்தைக் கட்டிக் காக்கும் திறனும் கொண்ட இளம் மேதை”** அன்றைய காலகட்டத்தின் மாபெரும் அரசியல் சிந்தனையாளர் என்றார்.

**மருது சகோதரர்களின் தூக்குத்தண்டனை**

ஆங்கிலேயரை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரைக்கு அடைக்கலம் தந்ததாக காரணம் காட்டி 1801 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் தேதி ஆங்கிலேயர் போர் தொடுத்தனர். இப்போரானது 150 நாட்கள் இடைவிடாமல் நடந்தது. காளையார் கோவில் காடுகளில் கொரில்லா முறையில் போர் நடந்தது. ஆங்கிலேயர்கள் மருது சகோதரர்களை பிடித்து கொடுப்பதற்கு வெகுமதி தருவதாக அறிவித்தார்கள். இதனால் ஒக்கூர் காட்டில் பதுங்கியிருந்த சின்ன மருது தன் உதவியாளன் கருத்தானால் சுடப்பட்டார். இதனால் கருத்தானுக்கு வெகுமதி அளித்தனர் ஆங்கிலேயர்கள். சிவகங்கை அரசர் வெங்கம் உடையனத் தேவர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். பாகனேரி அரசர் வாளுக்கு வேலி அம்பலமும் மருது சகோதரர்களை மீட்க எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்தன.

சின்ன மருது புலிக் கூண்டில் ஏற்றப்பட்டு வெளியாத்தூர் வழியாக திருப்புத்தூர் கொண்டு சென்று கூண்டோடு 24-10-1801ம் நாள் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. சின்ன மருதுவின் சடலம் தூக்கிலிடப்பட்ட இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடம் திருப்புத்தூர் மின் ஆஸ்பத்திரி சுற்றடைப்புக்குள் உள்ளது.

27-10-1801ம் நாள் அதிகாலையில் வெள்ளை மருது தூக்கு மேடையின் மீது நிறுத்தப்பட்டிருந்தார். அக்கினியூ மருதுவைப் பார்த்து நீர் இறுதியாக ஏதேனும் சொல்ல வேண்டுமாயின் சொல்லலாம் என்றான். “நான் சொல்லினால் சொன்ன தானங்களையும் முன்னினால் எழுதிய மானியங்களையும் எந்தக் காலத்திலும் பறிமுதல் செய்யக் கூடாது. என் தலை காளேசனைத் தவிர வேறு எவரையும் தாழ்ந்து வணங்கியதில்லை. எனவே, என் சடலத்தை காளையார் கோயில் காளேசன் சன்னிதியின் எதிரில் என் ஆத்தாள் சமாதி

அருகில் அடக்கம் செய்ய வேண்டும்'' என்றார் வெள்ளைமருது. அப்படியே நிறைவேற்றப்படும் என்று உறுதி செய்தான் அக்கினியூ. அதன்பின் மரண தண்டனை வழங்கப்பட்டது.

**முடிவுரை**

உலக அரங்கில் நாம் தலை நிமிர்ந்து நடக்க அன்று மருது பாண்டியர்கள், பகத்சிங், சுகதேவ் ஆகியோரை தூக்கிலிட்டபோது அவர்களின் தலைகள் தரையை நோக்கின. ஆனால் தூக்கிலிடப்பட்டதை அவர்கள் ஒருபோதும் தோல்வியாக கருதியதில்லை. அவர்கள் இலட்சியம் தோற்க்கடிக்கபடவேயில்லை. ஆதனால் தான் மகாகவி பாரதி பாடினார் சுதந்திரப்போர் பல முறை தோற்றாலும் இறுதியில் வெல்லும்.

**"தாதையர் குருதியின் சாய்ந்து நாம் மடியினும்**
**பின்வழி மக்கள் பேணு மாறளிக்கும்**
**சுதந்திரப் பெரும்போற்(ர்) ஒர்காற் தொடங்குமேற்**
**புலமுறை தோற்க்கும் பான்மைத் தாயினும்**
**இறுதியில் வெற்றி யோடிலகுதல் திண்ணம்".**

அன்று நமக்காகப் போரடிய வீரத் தியாகிகளின் அரிய ஆற்றலை, தன்னலமற்ற சேவையை நாம் என்றும் மறக்க முடியாது.

**மேற்கோள்கள்**


1. மு.சேகர், **வீரம் விளைந்த சிவகங்கை சீமையின் செம்மண்,** முத்துமீனா புத்தகப் பண்ணை, காளையார்கோவில், 1990.
2. மு. பாலகிருஷ்ணன், **விடுதலை போரின் விடிவெள்ளிகள்**, சென்னை மைக்ரோபிரிண்ட் (பி) லிட், சென்னை, 2001.
3. டாக்டர்.ந.சஞ்சிவி, **மானங்காத்த மருதுபாண்டியர்**, பாரிநிலையம், பிராட்வே, சென்னை, 1954.
4. மணிமன்ற அடிகள், **மாமன்னர் மருதுபாண்டியர் வரலாற்று கும்மி**, டாக்டர் என். சேதுராமன் மீனாட்சி மிசன் மருத்துவமனை, மதுரை, 1991.
5. மீ. மனோகரன்**, மருதுபாண்டிய மன்னர்கள் 1780-1801**, அன்னம் (பி) லிட், சிவகங்கை, 1994.
6. தி. சுந்திரசேகரன், **சிவகங்கை சரித்திரகும்மியும்**, அம்மானையும, Government Oriental Manusripts Library, Madras, 1954.
7. ஆ.நாராயணசாமி வித்துவான், **மருதுபாண்டியர் வரலாறு,** பாரதி பதிப்பகம், சென்னை, 1959.
8. டாக்டர்.என்.எம்.கமால், **சீர்மிகு சிவகங்கைச் சீமை**, பசும்பொன் மாவட்ட கலை, இலக்கிய வரலாற்று ஆயவு மையம், சிவகங்கை,1997.
9. மு.பாலகிருஷ்ணன், விடுதலைப்போரின் விடிவெள்ளிகள், சென்னை மைக்ரோ பிரிண்ட்(பி) லிட், சென்னை, 2001.
10. ஏம்.எஸ்.சுப்பிரமணிய அய்யர், மருது சகோதரர், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1995.
11. த.ஸ்டாலின் குணசேகரன், **தேச விடுதலையும் தியாகச் சுடர்களும்**, கற்பகம் புத்தகாலயம், சென்னை, 1998.
12. டாக்டா. என்.எம்.கமால், **மாவீரா் மருதுபாண்டியா்,** ஷா்மிளா வெளியீடு, மதுரை,1989
13. சிவகங்கை சமஸ்தான பதிவேடுகள்
14. அ. கணபதி, **தமிழக வரலாறு (1565-1985),** மதுரை, 1980.
15. மீ.மனோகரன், சேதுபதிகளின் மன்னா்ககள், அன்னம் (பி)லிமிடெட், இராமநாதபுரம்,1994.
16. கே.கே.பிள்ளை, தென்னிந்திய வரலாறு, பழநியப்பா பிரதா்ஸ், சென்னை, 1994.
17. லேனா தழிழ்வாணன், பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம், மணிமேகலைப் பிரசுரம், சென்னை,1987.
18. Edgar Thurston , **Castes and Tribes of South India**, Vol IV, 1909.

19. Williams Fullartons**, Report Military Sundries,** Vol – 66, 1784.
20. Dr.K. Rajayyan, **History of Madura**, Madurai University, 1974.
21. **Military Constitutions**, Vol -155/24.1.1792
22. Sathiyanatha Iyer, **History of Madurai Nayaks**, Asian Educational Services, New Delhi, 1928.
23. W.Francis, **Gazetteer of Madurai ,**1909**.**
24. Bernard S Cohn, " **Colonialism and its forms of Knowledge", The Hindu**, 1.06.97.
25. **'Revenue Sundries'**, 10th July, 1801, Vol 26.
26. Perey S. Gourgey, **The Indian Naval Revolt of 1946, & The Hindu**, dt. 2.2.97.
27. J.H. Nelson, "**The Madura Country – A Manual**", Part IV.
28. K. Rajayyan, **History of Tamil Nadu (1565-1982)** ,Raj Publishers, Madurai, 1982.
29. Dr. A.Ramasamy , **The District Gazetteer of Ramanathapuram**, Madras, 1972.